


Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 281 30.10.2024 பக்கங்கள்:05 editorml21@gmail.com விலை:75/-

# ஹரீஸ் பிழை என்றால்! பைசால் காசிம், தௌபீக் சரியா?



## கேள்வியெழுப்புகிறார் We are one அமைப்பின் இணைப்பாளர் முஹம்மது ரஸ்மின்

ஹரீஸ் எம்.பி 20 க்கு கைதூக்கிய காரணத்தினால் இம்முறை வேட்புமனு வழங்கப்படவில்லை. சரி, அப்படி என்றால், பைசல் காசிம் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் என்ன 200 க்கா கை தூக்கியவர்கள்? இவர்களுக்கு எப்படி வேட்புமனு வழங்கப்பட்டது?

இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் நல்லாட்சி தேசிய முன்னணியின் ஆதரவு ( we are one) அமைப்பின் இணைப்பாளர் முஹம்மது ரஸ்மின் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை முன்னிட்டு அம்பாறை ஊடக மையத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் தொடர்பான விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02 ⏭

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

## "நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடும் நிதிக்கு என்ன நடந்தது?




(யாஷ்பி அனாம்)

கல்முனை மாநகர சபைக்கு எதிராக இலங்கை நீதிக்கான மய்யம் கல்முனை மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கொன்றினை இன்று (29) செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்துள்ளதாக நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமானி ஷ.்.பி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபை பகுதியில் புதிய நீர் இணைப்புக்காக மாநகர சபையின் அனுமதி பெற்று தோண்டப்படுகின்ற கொங்கிரீட் வீதிகள் இன்னும் செப்பனிடப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றமையை எமது மய்யம் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.

இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினரால் பொறுப்புணர்ச்சியற்ற கண்துடைப்பான பதில் எமக்கு வழங்கப்பட்டது. இதனை எமது மய்யம் ஏற்றுக்கொள்ளாததால் இன்று மாநகர சபைக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கிற்கு மய்யத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றின்சான் ஆதியோரும் ஆஜராகியிருந்தனர். புதிய நீர் மின் இணைப்பினை பெறும் விண்ணப்பதாரர்கள்-


கல்முனை மாநகர சபைக்கு

02 ⏭

பொதுத்தேர்தலுக்கான விளம்பரங்களை குறைந்த விலையில் எமது பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை தொடர்பு கொள்ளுங்கள் 0772539298, 0779007738

# மீண்டும் வரிசைகள் வருமா?

## -ரணில் விக்மசிங்க



நியூயோர்க்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் உண்மை நிலையை ஜனாதிபதி உடனடியாக நாட்டுக்கு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்

02 ⏭

# பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 716 முறைப்பாடுகள்

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 716 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

02 ⏭

## ஹரீஸ் பிழை..........

முஹம்மது ரஸ்மின் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தமிழ் மொழி பேசும் சமூகங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. இதுவரை இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அவற்றுக் கெல்லாம் எந்த தீர்வையும் காணவில்லை. அரசியலுக்காக பிச்சைக்காரனின் புண்போல பிரச்சினைகளைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி தொடர்ந்து அரசியல் செய்து வருகின்றனர்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டுக்கு தரமான தலைவர் அநுரகுமார திசாநாயக்க கிடைத்துள்ளார். நாட்டுக்கு தேவையான நல்ல தலைவரை தெரிவு செய்யுங்கள் என்று அன்று அவர் கூறினார். இப்போது கூறுகிறார் உங்களுக்கு தேவையான உங்கள் தலைவர்களை தெரிவு செய்யுங்கள் என்று. அதுதான் உண்மை.

இப்போது பாராளுமன்றத் தேர்தல் வந்திருக்கிறது. எமக்கு தேவை உண்மையாக செயல்படும் அரசியல் தலைவர்கள்.

அறுகம்பை சம்பவத்துக்கு இதுவரை யாருமே வாய் திறக்காதது ஏன்? பொத்துவிலில் உள்ள முஷாரப்பே வாய் திறக்கவில்லை. என்ன அநுரவுக்கு பயந்து நிற்கிறீர்களா? அல்லது தமது இருப்பு கேள்விக் குறியாக போகும் என்று நினைக்கிறீர்களா? இவர்களா தலைவர்கள்?

கடந்த காலங்களில் எமது தலைவர்களாக இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும். தயவு செய்து சமூகத்துக்கு உதவி செய்ய வேண்டுமாக இருந்தால் இந்த போட்டியில் இருந்து ஒதுங்கி கொள்வது நல்லது. புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

சமூகத்துக்கு முழுக்க முழுக்க அசிங்கத்தை அள்ளித்தந்தவர்கள் எமது இஸ்லாமிய அரசியல் தலைவர்கள். ஜனாஸா எரிப்புக்கு துணைபோன இவர்கள் இனத்துரோகிகள்.

ஹக்கீம் 30 வருட காலம் எம்.பியாக இருந்து முஸ்லிம் சமூகத்திற்காக சாதித்தது என்ன?

20க்கு கை தூக்கியதன் பலன் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. அப்போது ஹாபிஸ் நசீர் சொன்னார் 180 பெட்டிகளே எரிக்கப்பட்டன. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும் அவற்றில் ஜனாஸாக்கள் இல்லை என்று. அவரின் அந்த பித்தலாட்டமான பேச்சையும் ஹக்கீம் கைகட்டிப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் 2,500 இஸ்லாமிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். தலதா மாளிகை முன்பாக பௌத்த பிக்குமார் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதனையடுத்து முஸ்லிம் எம்பிக்கள் பதவி விலகினார்கள். ஆனால், வெறும் 13 நாட்களின் பின்னர் மீண்டும் பதவியேற்றார்கள். எப்படி இவர்களின் நாடகம்?

அவர்களுக்கு அரசியல் அதிகாரம் என்பது சேர்ட் போடுவது மாதிரி. சரி இந்த அதிகாரத்தை வைத்து சமூகத்துக்கு என்ன செய்தார்கள்?

திகன கலவரம், அளுத்கம கலவரம், அக்குறணை கலவரம் என்பனவற்றுக்கு நீதி கிடைத்ததா? இல்லை.

அக்குறணைப் பிரதேச மக்களின் பொருள் அழிவைத் தடுப்பதற்கு ஒரு வெள்ள பாதுகாப்பை தானும் அங்கு ஏற்படுத்த முடிந்ததா? இல்லை .

குர்ஆன், ஹதீஸ், மதூரா என்று அரசியல் மேடைகளில் முழங்குகிறார்கள். இவர்களுக்கு வெட்கம் இல்லையா?

வாக்களிக்கும் மக்களாகிய நாம்தான் இனம் கண்டு இவர்களை அரசியலில் இருந்து விரட்ட வேண்டும்.

ஹக்கீம் என்றாவது சமூகத்துக்காக எங்காவது கறுப்பு கோர்ட் அணிந்து கொண்டு நீதிமன்றம் போனாரா? இல்லையே.

ரணில் போன்றோருக்கு ஆதரவாக மட்டுமே இவர் நீதிமன்றம் ஏறினார். அம்பாறை, திகன, அளுத்கம, பேருவளை இப்படி முஸ்லிம் சமூகத்துக்காக கறுப்பு கோர்ட் அணிந்து கொண்டு நீதிமன்றில் ஏறினாரா? இல்லையே .

இனி இவர்கள் போன்றவர்கள் மக்களை ஏமாற்ற முடியாது. இவர்களை நார் நாராய் கிழித்து தொங்கவிடுவோம்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சொல்கிறது எட்டு இடங்களில் வெல்வோம் என்று. மயில் கட்சியின் தலைமை சொல்கிறது பத்து இடங்களில் வெல்வோம் என்று. முதலில் முடிந்தால் உங்களின் சொந்த ஆசனத்தை காப்பாற்றிக் கொள்ளுங்கள் பார்க்கலாம் .

எமது நல்லாட்சி தேசிய முன்னணியில் பணம் இல்லை, பதவியில்லை. வாகனமில்லை. இலஞ்சம் இல்லை ஊழல் இல்லை.

நாங்கள் இன்று கொழும்பிலிருந்து எங்களது பணத்தில் வந்திருக்கிறோம் எங்கள் பணத்தில் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். பயணம் செய்கிறோம். ஆனால் எங்களிடம் இருப்பதெல்லாம் உண்மை நேர்மை.

தேசிய ரீதியிலே மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல் பிராந்தி ரீதியிலும் அத்தகைய மாற்றம் தேவை.

எனவே, இந்த பழைய ஏமாற்று அரசியல்வாதிகள் சமூகத் துரோகிகள் அனைவரையும் அரசியலில் இருந்து துரத்தியடிப்போம்.

சமூக சிந்தனையுள்ள திறமையான புதிய முகங்களைத் தேர்ந்து ஊழலற்ற அரசாங்கத்தை ஏற்படுத்துவோம். இவ்வாறு முஹம்மது ரஸ்மின் தெரிவித்தார்.

## கல்முனை மாநகர சபைக்கு......

ஏற்கனவே புதிய நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடு வதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குள் நீர் இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டப்பட்ட வீதிகள் மாநகர சபையினால் செப்பனிடப்படாமல் நெடுங்காலமாக காணப்படுகின்றது.

இது மாநகர சபை கட்டளை சட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி, வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்பு களாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது, மாநகர சபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்குட்படுத்துகிறது.

ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிக்கான மய்யம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தோண்டப்பட்ட வீதிகளை செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததோடு, மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அன்றே தெரிவித்திருந்தோம்.

அரசு நிறுவனம் ஒன்றுக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதானது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும்.

## மீண்டும் வரிசைகள்........

என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்வைக்கும் அனைத்து யோசனைகளையும் நடைமுறைப்படு-த்தினால் வரவு - செலவுத் திட்ட இடைவெளி 2,500 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கலாம் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, மீண்டும் வரிசைகள் வருமா? பணவீக்கம் அதிகரித்து வருகிறதா? ரூபா மதிப்பு குறையுமா? மேலும் வட்டி அதிகரிக்குமா என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

கேஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் கொழும்பு மாவட்ட வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக அதுருகிரியில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நமது பட்ஜெட் இடைவெளி 2500 பில்லியனாக உயர்ந்தால் நாட்டின் கதி என்ன? முடிவுகளைச் சொல்லத் தேவையில்லை? முதலில் தற்போதைய நிலைமையை நாட்டுக்கு சொல்லுங்கள்.

எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுமாயின் அவற்றை எவ்வாறு கையாள்வது எனத் தெரிந்தவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு மக்களுக்கு நான் கூறுகிறேன்.

வரவு - செலவுத் திட்டம், ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பற்றிக் கூடத் தெரியாதவர்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படுகிறார்களா என்றும் கேள்வியெழுப்பினார்.

## பொதுத் தேர்தல்...........

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 580 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள 136 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.



# அரசியல் களம்

## பாராளுமன்ற தேர்தல் –2024

# தனித்து நின்று ஜனாதிபதியுடைய கட்சியால் ஆட்சி செய்ய முடியாது

## சிறுபான்மை மக்களுக்காக பேசக்கூடிய ஆளுமை சஜித் பிரேமதாச மாத்திரமே

### முன்னாள் அமைச்சர் றிசாட் பதியூதீன் தெரிவித்தார்



தனித்து நின்று ஜனாதிபதி யுடைய கட்சியால் ஆட்சி செய்ய முடியாது என்ற செய்தியை எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் சொல்லியிருப்பதுடன் சிறுபான்மை மக்களுக்காக பேசக்கூடிய ஆளுமை உள்ள தலைவராக சஜித் பிரேமதாச மாத்திரமே இருப்பதாக முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட வேட்பாளருமான றிசாட் பதியூதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் தேர்தல் பிரச்சார கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு விட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகள் நாட்டுக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது. அதாவது கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார 42 சதவீதமான வாக்குகளை பெற்றிருந்தார். அந்தவகையில் 58 சதவீதமான வாக்குகள் அவருக்கு எதிராக இருந்தது. ஜனாதிபதி தேர்தலின் பிறகு உடனடியாக ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் வாக்குகள் அதிகரிப்பதுவே வழமை. ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்ற செய்தியை எல்பிட்டிய தேர்தல் நாட்டுமக்களுக்கு சொல்லியிருக்கின்றது.

அந்த தேர்தல் முடிவுகளின் படி தனித்து நின்று ஜனாதிபதியுடைய கட்சியால் ஆட்சி செய்ய முடியாது என்ற செய்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் வாக்குகள் குறைவடைந்து கொண்டே செல்கின்றது. எனவே தமிழ் பேசுகின்ற மக்கள் ஆழமாக சிந்தித்து இந்த தேர்தலில் தங்களது பிரசதேசங்களுக்காக பணியாற்றக்கூடிய நல்லவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். வன்னியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசனங்கள் எமக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

தேர்தலுக்கு முன்னர் பேசுவது இலகுவாக இருக்கலாம். பேசிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது கடினம். செய்யக்கூடியதை சொல்லியிருந்தால் மாத்திரமே செய்ய முடியும்.

எனவே நாம் ஒரு கோசத்திற்காக ஏமாந்து வாக்களித்து விடாமல் ஒன்றுபட்டு எமக்கு சேவை செய்யக்கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டும். அது தமிழ் கட்சிகளாக இருந்தாலும் பறவாயில்லை முஸ்லீம் கட்சிகளாக இருந்தாலும் பறவாயில்லை.

நாம் எமது தலைமைகளை இழந்துவிடக்கூடாது. சிறுபான்மை சமூகங்கள் தலைமைகளை இழந்து விட்டால் நம்மை அடக்கி துன்பப்படுத்தும் போது அதற்கு எதிராக பேசுவதற்கு தலைமைகள் இல்லாத நிலையே ஏற்படும்.

# பாராளுமன்றத்தில் சுகபோகம் அனுபவிக்கும் சிலருக்கு இத்தேர்தல் பாடம் புகட்டும்

### மு.கா வேட்பாளர் சிராஸ் மீராசாஹீப்



நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை பெறக்கூடிய நிலைக்கு முன்னேறி வருவதாக திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முதல்வராகவிருந்து மக்கள் பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு உதாரணமாக பிரதேச வேறுபாடுகளின்றி மக்களுக்கு தேவையான விடயங்களை இனம் கண்டு சேவையாற்றிய-வன் என்ற வகையில் இந்த பாராளுமன்றத் தேர்தலில் நானும் ஒரு வேட்பாளராக களமிறங்கியுள்ளேன்.

பாராளுமன்றத்திற்கு புதுமுக வேட்பாளராக இருந்தாலும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றால் ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக நான் செயல்பட திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

மக்கள் வாக்குகளைப் பெற்று சுகபோகம் அனுபவிக்கின்றவர்களுக்கு மத்தியிலிருந்து அவர்களது வாக்குகளால் மக்களுக்கு சேவை செய்ய தயாராகவுள்ளேன்.

ஊழலற்ற நேர்மையான ஒருவனாக மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கின்றவனாகவும் மக்களது தேவைகளை இனம் கண்டு அபிவிருத்திகளின் பால் நமது பிரதேசத்தை ஈர்க்கின்ற ஒருவனாகவும், சர்வதேசம் தொடக்கம் தேசிய ரீதியில் பல்வேறு தரப்பினருடனும் தொடர்புகளை வைத்துள்ள என்னால் பல விடயங்களை மக்களுக்காக செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது என்று தெரிவித்தார்.

# பாராளுமன்ற வேட்பாளரின் ஆதரவாளரது கடை அடித்து நொறுக்கப்பட்டுள்ளது

### பெரிய நீலாவணையில் சம்பவம்

**(பாறுக் ஷிஹான்)**



இனந்தெரியாதோரினால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் பாராளுமன்ற வேட்பாளரின் ஆதரவாளரது கடை அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

கல்முனை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு தாளவட்டுவான் பிரதான வீதியில் அமைந்துள்ள தற்காலிக கடை ஒன்றே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் குறித்த கடை உரிமையாளர் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் வேட்பாளர் வைத்தியர் பிரகாஸின் ஆதரவாளரது கடையே அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு குறித்த வேட்பாளர் சென்று சேதமடைந்த கடையை பார்வையிட்டதுடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்திற்கு ஆதரவாளருடன் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் போது பொலிஸ் நிலையத்தில் குறித்த முறைப்பாடு ஏற்றுக் கொள்ளாமையின் காரணமாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய எண்ணியுள்ளதாக பாதிக்கப் பட்ட கடை உரிமையாளர் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

# அம்பாறை தமிழர்களை நடுத்தெருவில் நிற்க வைக்கும் முயற்சியில் பிள்ளையான்

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன்**



(கஜனா)

அம்பாறை மாவட்ட தமிழர்க-ளின் பிரச்சனையில் இதுவரையில் குரல் கொடுக்காத அன்றைய முதலமைச்சராக இருந்த பிள்ளையான் இன்று தமிழர்களை தெருவில் நிற்க வைக்கும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் களம் இறங்கியிருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் கவீந்ரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். கல்முனையில் இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கடந்த காலத்தில் பாராளுமன்ற பிரதிநிதிதுவம் இழந்த போது தமிழரசு கட்சி அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்களை அனாதையாக விடக்கூடாது அவர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர் பின்னடைவு அடைந்த போதிலும் தங்களுக்கு கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் அங்கத்துவத்தினை அம்பாறை மாவட்டத்திற்கு கொடுத்து கௌரவப்படுத்தி இருந்தது. எனவே ஒவ்வொரு தமிழ் மக்களும் இந்த கட்சிக்கு கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

2024 ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை இழக்குகின்ற போது அதனால் ஏற்படுகின்ற விளைவானது மிகவும் பாரதூரமாக இருக்கும். அந்த நிலையினை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மூச்சு விட முடியாத ஒரு நிலையாகவே நான் கருதுகிறேன்.

இந்த பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் வரவில்லை என்றால் எந்த ஒரு காலகட்டத்திலும் தமிழ் பிரதிநிதித்துவம் வராது என்பதை நான் உறுதியாக கூறுகிறேன். இப்படி ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் எதிர்வரும் காலத்தில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அடிமையாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பிரதிநிதித்துவம் இழக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம்களிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும் என்பதை அம்பாறை தமிழர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்தது என கேள்வி கேட்கும் கட்சிகளுக்கு மீண்டும் மாறி அதே கேள்வியை கேட்குமாறு கூறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பிர் கவிந்திரன் கோடீஸ்வரன், முதலமைச்சராக இருந்த பிள்ளையான் அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்து இருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்திற்கு அபிவிருத்திக்காக ஏதேனும் ஒரு சதம் செலவழித்து இருக்கிறாரா? அதேபோன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரச்சினைகளுக்கு எப்போதாவது குரல் கொடுத்திருக்கின்றாரா? என கேள்வி எழுப்பியதோடு

25 வருடமாக கபினட் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்டத்திற்கு எவ்வித காரியங்களும் இதுவரையில் செய்யப்படாத நிலையில் இப்போது பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் களம் இறக்கி இருக்கிறார். இங்கு சிறிதளவு வாக்கை பெற்றுக் கொண்டு அம்பாறை தமிழர்களின் வாக்குகளை சூறையாடி தனது சகாக்களில் ஒருவரை தேசியப் பட்டியலில் நிரப்புவதற்காக அம்பாறை மாவட்டத்தில் களமிறங்கி இருக்கிறார் என தெரிவித்தார்.

# எங்களை சொந்த நாட்டினுள் அகதிகளாக வைத்திருக்க வேண்டாம்- வேட்பாளர் பிரகாஷ்

(பாறுக் ஷிஹான்)



எங்களை சொந்த நாட்டினுள் அகதிகளாக வைத்திருக்க வேண்டாம். நினைவேந்தலுக்கு ஒரு விளக்கும் கூட கொழுத்தாதவர்கள் இன்று தேர்தலில் நிற்கிறார்கள். இலங்கை தமிழரசுக் கட்சியில் தும்பு தடியை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற மடத்தனமான சிந்தனை இன்று மலையேறிவிட்டது. இம்முறை தேர்தல் அதற்கு சாட்சி பகரும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வைத்தியர் இராஜகுமார் பிரகாஷ் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக மையத்தில் பொதுத்தேர்தல் மற்றும் சமகால அரசியல் தொடர்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்

நாங்கள் கடந்த 25 வருடங்களாக மக்களோடு மக்களாக பயணிப்பவர்கள். அரசியலுக்கு நாங்கள் புதிதாக குதித்தவர்கள் அல்லர்.கோடிக்கணக்கில் பணத்தை நாங்கள் செலவழிக்கவில்லை. அதற்கு எம்மிடம் பணமும் இல்லை. எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள். எப்போதும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிக்க தயாராக உள்ளோம். எமது தமிழ் மக்களை பிழையாக வழிநடாத்த வேண்டாம் தமிழரசுக்கட்சியை நாங்கள் விமர்சிக்க வரவில்லை. அக்கட்சி எமது தாயக கட்சி.தமிழ் தேசிய கொள்கையை எமது உள்ளம் ஏற்று ஏக்கத்துடன் பயணிக்கின்றது. அக்கட்சியை ஒரு சில நபர்கள் பிழையாக வழிநடாத்துகின்றார்கள்.

அவர்களது தலைக்கணத்தை உடைப்பதற்கே அணியாக நாங்கள் ஒன்று சேர்ந்துள்ளோம்..

தந்தை செல்வநாயகம் விதைத்த தமிழ் தமிழ் தேசியம் இன்னும் எங்களது உள்ளத்தில் ஏக்கத்துடன் காணப்படுகின்றது. நாங்கள் அக்கட்சியை விமர்சிக்க வில்லை. ஆனால் அதில் உள்ள ஓரிரு தலைவர்களின் செயற்பாடு தான் இன்று அது இந்த அளவு மோசமாக நிலைமைக்கு போனதுக்கு காரணம். ஒரு சிலரது தலைக்கனம் ஆணவம் உடைக்கப்பட வேண்டும் . பழைய தரமான தலைவர்கள் ஒதுங்கி விட்டார்கள்.

இதே வேளை எமது சில இளைஞர்கள் அரச பக்கம் கவனத்தை திருப்பி இருக்கிறார்கள்.அதற்கு சில தமிழ் கட்சிகள் தான் காரணம் என்பதனை மறந்து விட முடியாது. ஆனால் அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த சிந்தனை பிழைக்கும் .எனவே இளைஞர்கள் சிந்தித்து ஒற்றுமைக்காக வாக்களிக்க வேண்டும். எங்களுக்கும் அரசியல் தலைமை வேண்டும் என்ற உயரிய சிந்தனையை மறந்து விட வேண்டாம் என்றார்.

## அம்பாறையில் இரண்டு ஆசனங்களை பெறலாம்

*அ.இ.ம.கா தலைவர் ரிஷாட்*

பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அ.இ.ம.காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு உழைத்தால், அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களை பெற முடியும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

திகாமடுல்ல மாவட்டத்-தில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக விழா அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது, இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு துரோகம் செய்த எவரும் அரசியலில் நிலைக்கப்போவதில்லை, இம்முறை பொதுத் தேர்தல் முடிவுகள் இதனை உண்மைப்படுத்தும் என்றார்.

# சலீம் போன்ற கல்வியலாளர்களை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தான் நிறுத்தியுள்ளது

## மக்கள் காங்கிரஸின் தலைவர் றிசாட் பதியுதீன்

நாட்டில் தற்போது System change பற்றி பரவலாக பேசப்படுகின்றது. மக்கள் எதிர்பார்க்கும் அந்த மாற்றம் ஏற்பட வேண்டுமானால் பாராளுமன்ற உறுப்பினர்களிலும் சிறந்த அனுபவமுள்ள இறைவனுக்கு பயந்து பயணிக்கக்கூடிய நல்லவர்களை மக்கள் பாராளுமன்றத்து -க்கு அனுப்ப முன்வரவேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் தேர்தல் காரியாலயங்களை திறந்து வைக்கும் நிகழ்வும், மாவட்டம் முழுவதும் இடம்பெற்றது. இந்த வரிசையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளர் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்.சலீமின் அறிமுகமும் அலுவலக திறப்பு விழாவும் சாய்ந்தமருதில் இடம்பெற்றபோதே அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர் றிசாட் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடுமுழுவதும் சிறந்த வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. அந்த வகையில் சாய்ந்தமருதில் சிறந்த நிருவாகியான சலீமை நிறுத்தியுள்ளோம் அவர் இந்த பிராந்தியத்துக்கும் விஷேடமாக இந்த சாய்ந்தமருதுக்கும் ஆற்றிய பணிகளை இங்குள்ள மக்கள் நன்கு அறிவர்.

அவர் சாய்ந்தமருது மக்களின் பல்வேறு தேவைகளுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர். அவரைப் போன்று நாங்கள் நிறுத்தியுள்ள அத்தனை வேட்பாளர்களும் ஏதே ஒரு துறையில் சிறந்தவர்களையே நிறுத்தியுள்ளோம். இந்த தேர்தலானது மிக முக்கியமான ஒன்றாகும். உணர்ச்சிகளுக்கு கட்டுப்பட்டு, மக்கள் பிழையான முடிவை எடுத்துவிடக்கூடாது.

சில சந்தர்ப்பங்களில் மக்கள் எடுத்த பிழையான தீர்மானங்களினால் நாடும் நாமும் கஷ்டத்தில் இருப்பதையும் மறந்துவிடக்கூடாது என்றும் தெரிவித்தார்.

# ஆக்கபூர்வமான எதையும் செய்யாத கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து நமக்கு நாமே சேறு பூசிக்கொள்ளும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்

## இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கான மக்கள் செல்வாக்கு பெரிதும் அதிகரித்து வருவதாக இளைஞர் அமைப்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளருமான றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

கல்முனையில் கட்சியின் தேர்தல் பிரசார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.. இந்நிலையில் கல்முனையில் 35 ஆயிரத்துக்கும் மேல் வாக்குகள் உள்ளன. தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளின் வேட்பாளர்கள் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஓர் உறுப்பினரை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அதிகம் உள்ள நிலையில் கல்முனைப் பிரதேச மக்கள் தங்களது வாக்குகளை சரியாக சிந்தித்து வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவார்களாகயிருந்தால் எனக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

மக்கள் செல்வாக்கை இழந்து மக்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ள கட்சிகளுக்கு வாக்களித்து தங்களது வாக்குகளை வீணடித்து விடாமல், நேர்மையாக அரசியல் செய்து மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களுக்கு தமது வாக்குகளை வழங்க வாக்காளர்கள் முன்வர வேண்டும். வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளைச் சூடாக்கிவிட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான எதையும் செய்யாத கட்சிகளின் வேட்பாளர்களு-க்கு வாக்களித்து நமக்கு நாமே சேறு பூசிக்கொள்ளும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் மக்கள் செல்வாக்குடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவு பெருகி வருகின்ற நிலையில், கல்முனை பிரதேச மக்களும் இதனோடு இணைந்து நமக்குச் சாத்தியமான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வாக்குகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ் திறமையான, நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களமிறக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வெற்றியை உறுதிசெய்து நமக்கான பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். எனக் கேட்டுக்கொண்டார்.

# வேட்பாளர் ஜெமீலுக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு



கிழக்கு மாகாண சபையில் இரு தடவைகள் உறுப்பினராக, குழுக்களின் தலைவராக, திணைக்கள தலைவராக இருந்து அம்பாறை மாவட்ட மக்களுக்கு செய்த மக்கள் பணியை கௌரவிக்கும் விதமாக சாய்ந்தமருது தாய்மார்கள் வரவேற்று ஆதரவளித்த சந்திப்பு கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பிர் ஏ.எம்.சாஹிர் ஹுசைன் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேசத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் சமூகத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும் ஏ.எம். ஜெமீல் செய்த சேவைகள் பற்றி சிலாகித்து பேசிய தாய்மார்கள் தமது ஆதரவை ஜெமீலுக்கு வெளியிட்டதுடன் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் ஏ.எம். ஜெமீலின் கரத்தினை பலப்படுத்தி அவரது வெற்றிக்காக களத்தில் இறங்கி தேர்தல் பணி செய்ய முன்வந்துள்ளார்கள்.

இந்த மக்கள் சந்திப்பில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர் யூ.எல்.என்.ஹுதா, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சுஹைல் அஸீஸ், இளைஞர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எப்.எம். தில்சாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



மூதூரில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த லொறி வாகரை பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் லொறியின் சாரதி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்று 29 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணையினை பொலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

( படம்: எம்.எம்.எம்.அஸீஸ்)

# திருகோணமலை மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள ஊடகக் கருத்தரங்கு

(ஸைபுல் ஹபீஸ்)

திருகோணமலை மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள ஊடகக் கருத்-தரங்கு எதிர்வரும் 2024.11.01ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு கிண்ணியா அப்துல் மஜீத் வித்தியாலயம் (எழில் அரங்கு மைதானத்திற்கு அருகில்) நடைபெறவுள்ளதாக திருகோணமலை மீடியா போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தெரிவித்தார்.

இந்த ஊடக கருத்தரங்கு செய்திகள் எவ்வாறு எழுதுவது? செய்தி அறிக்கையிடல் போன்ற தலைப்புக்களில் இடம்பெறவுள்ளது. ஊடகத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் இந்த ஊடக கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம்.

ஊடக கருத்தரங்கில் கலந்து கொள்ள ஆர்வம் உடையவர்கள் தங்களுடைய முழுப் பெயரையும், தொடர்பு இலக்கத்தையும் பின்வரும் இலக்கங்கள் உடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பதிவு செய்து கொள்ளவும் முடியும் 0752176268, 0779919368 எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கலந்து கொள்ளும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.